உ

**தணிகை ஜோதிட நிலையம்**

**பாலு சரவண சர்மா**

*பழைய தாம்பரம் கிராம புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கணணம்*

எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45, பாரத நாடு.

தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677

மின்னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com

## குழந்தை பிறப்பு - நல்ல நேரம் - கேள்வி பதில்



குழந்தை ஆரோக்கியமாக வளரவும்,
நோய் எதிர்ப்பு சக்தி பெறவும் ஒரு வருடம் வரை தாய்பால் ஊட்டுங்கள்.



ராகுகாலம், எமகண்டத்தில் பிறக்கலாமா?

ஜாதகம் பார்க்கும் பொழுது அல்லது ஜாதகம் எழுதும் பொழுதோ ராகுகாலம், எமகண்டத்தை கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை மேலும் பிறப்பு என்பது இயற்கையானதே அதை தடுக்கலாகாது.
ஜாதகத்தில் ஒருகுழந்தை இராகு காலத்தில், எமகண்டத்தில் பிறந்த தகவல் இடம்பெறுவதில்லை,
ஜாதக பலன் சொல்ல ராகுகாலம், எமகண்டம் பற்றிய தகவல் தேவையும் இல்லை

செவ்வாய் கிழமை, சனிக்கிழமை நாட்களில் பிறக்கலாமா?

குழந்தையின் பிறப்பு என்று வேண்டுமானாலும் இருக்கலாம் கிழமைக்கு எந்த தோஷமும் இல்லை

எந்த நட்சத்திரம் நல்ல நட்சத்திரம் ?

அனைத்து நட்சத்திரங்களும் நல்லவையே.
ஒவ்வொரு நட்சத்திரத்திலும் எண்ணற்ற மகான்கள், தலைவர்கள், அறிஞர்கள், அறிவியலாளர்கள், நாட்டைகாத்த வீரர்கள், கலைஞர்கள், திறனாளர்கள், தியாகிகள், தர்மவான்கள், தொழிலதிபர்கள், நீதிமான்கள் இப்படி நல்லவர்கள் பிறந்துள்ளனர்.
குறிப்பிட்ட எந்த நட்சத்திரமும் தீங்கானவை அல்ல

தொப்புள் கொடி சுற்றி பிறப்பு - தாய்மாமன்

இது தோஷம் அல்ல, ஜாதகத்தில் இந்த தகவல் இடம்பெறாது
இயற்கையான பிரசவத்தில் மட்டும் குழந்தை தொப்புள் கொடி சுற்றி பிறந்தால்,குழந்தைக்கு புன்னியாவசனம் செய்த பின்னர், தாய்மாமன் குழந்தையை நேரில் பார்க்காமல் முதலில் எண்ணை சட்டியில் நல்லெண்ணையை ஊற்றி அதில் தெரியும் குழந்தையின் பிம்பத்தை பார்க்கவேண்டும் அடுத்து கண்ணாடி மூலமாக தெரியும் குழந்தையை காணவேண்டும் பிறகு நேராக குழந்தையை காணவேண்டும். கண்ணாடி மற்றும் நல்லெண்ணையை மாலையில் அம்மன் கோவிலுக்கு தானமாக தரவேண்டும். ஏழை குழந்தைக்கு துணி தானமாக தரவும்.

அஷ்டமி, ரோகினியில் பிறக்கலாமா?

தோஷம் இல்லை.
அஷ்டமி திதியிலும், ரோகினி நட்சத்திரத்திலும் பிறந்தால் கிருஷ்ணர் கோவிலுக்கு வெண்கல கிண்ணத்தில் நல்லெண்ணைய் தீபம் ஏற்றி தானம் செய்யவும்.
தாய்மாமன் பெயரில் அர்ச்சனை செய்யவும்

எப்பொழுது தாய் - குழந்தை கோவிலுக்கு போகவேண்டும்?

16, 30ஆம் நாட்களில்

**எச்சரிக்கை ! ஏமாற வேண்டாம்!!**

குழந்தை பிறந்த நேரம் தோஷம் உள்ளது இதற்கு பரிகாரம், சாந்தி செய்யவேண்டும் என்று கூறுபவர்களிடம் மிகுந்த எச்சரிக்கையாக இருக்கவும். பரிகாரமும், சாந்தியும் **தர்மத்தின் அடிப்படையில்தான்** இருக்கவேண்டும். அதாவது ஆதரவற்ற குழந்தைகளுக்கு அன்னதானம் செய்தல், துணி தானம் செய்தல் போன்ற வழிகளே சரியானது மற்றபடி ஏதும் தர்மசாஸ்திரங்கள் கூறவில்லை. தவறான வழிகாட்டுதல்களை ஏற்க்கவேண்டாம் !

எந்த நட்சத்திரத்தில் பிறந்தால் நவக்கிரகஹோமம் செய்ய வேண்டும்

ரோஹினி, பூசம், ஆயில்யம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், அனுஷம், மூலம், பூராடம், உத்திராடம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, ரேவதி இந்த நட்சத்திரத்தில் குழந்தை பிறந்தால் நாமகரணத்தில் நவக்கிரக ஹோமம் செய்ய வேண்டும்.

கிரஹணகாலத்தில் குழந்தை பிறந்தால்

நவக்கிரஹ ஹோமம் செய்ய வேண்டும்

சிசேரியன் நல்லதா?

மருத்தவர் முடிவே தாய் சேய் இருவருக்கும் நல்லது.
குழந்தை இயற்கையாக பிறப்பதே சரியானது அப்படி பிறக்கும் குழந்தையின் ஜாதகமே பலிக்கும்.
நல்லநேரத்தில் பிறக்க வேண்டும் என்பதற்காக குழந்தையை முன்னதாக அறுவை சிகிச்சை மூலம் பிறக்க வைப்பது தவறாகும். அப்படி பிறக்கும் குழந்தையின் ஜாதகமும் தவறாகவே அமையும்.

எப்பொழுது சிசேரியன் செய்யலாம்?

சிசேரியனை ‘‘மருத்துவ சிகிச்சை’’ என்கிற நிலையில் ‘‘அஷ்டம சுத்தியான லக்ன’’ நேரத்தில் செய்யலாம்.
இதை குழந்தை பிறப்பிற்காக என கருத்தில் கொள்ளக்கூடாது.
‘‘மருத்துவ சிகிச்சைக்கு’’ நல்ல நேரம், நாள் போன்ற விபரங்கள் ஜாதக நூலில் உள்ளது

குழந்தையை அறுவை சிகிச்சை மூலம் பிறக்க நல்ல நேரம் என்று யாராலும் கணிக்க முடியாது ஏனெனில் இந்த சிசேரியன் முறை 100ஆண்டுகளாத்தான் கடைபிடிக்கப்படுகிறது. எனவே இது தொடர்பான எந்த ஆதாரமான தகவலும் எந்த ஜோதிட நூலிலும் இல்லை.
*இதுதொடர்பாக நல்ல நாட்கள் கணித்துத்தரப்படும்*

ஆனிமாதமும் தலைச்சன் குழந்தையும்

ஆனிமாதத்தில் தலைச்சன் குழந்தை பிறப்பு மிகவும் சிறப்பானது
ஆனிமாதத்தில் பிறக்கும் தலைமகனுக்கும், தலைமகளுக்கும் ஆனிமாதத்தில் மட்டும் திருமணம் செய்யக்கூடாது மற்ற மாதங்களில் இருவருக்கும் திருமணம் செய்யலாம்

புன்னியாவசனம், பெயர் சூட்டல் என்று செய்யலாம்?

குழந்தை பிறந்த 7,9,11,16,21, 30, ஜென்ம நட்சத்திரம் ஆகிய தினங்களில் பெயர்சூட்டல் வைபவம், புன்னியாவசனம் செய்யலாம்
குறைப்பிரசவத்தில் பிறந்த குழந்தைகளுக்கு 3ஆம் மாதத்தில் செய்வது நன்று.

வெளிநாட்டில் வசிப்பவர்கள் - குழந்தை பெயர் சூட்டல்

வெளிநாட்டில் குழந்தை பிறந்தால் தாயகத்தில் உள்ளவரைகளுடன் கலந்து பேசி பெயரை தேர்வு செய்து உடனே சட்டப்படி பெயரை பதிவு செய்யவும்.
தாயகம் திரும்பியபின்னர் (ஒரு வருடத்திற்குள்) குழந்தையின் நட்சத்திரம் அன்று பெயர்சூட்டல் வைபவத்தை பெரியவர்கள் முன்னிலையில் செய்யவும்
ஒரு வருடத்திற்கு மேலாக ஆனால் நல்ல நாளில் பெயர் சூட்டல், ஆயுஷ்ஹோமம் செய்தல் நன்று

குழந்தைக்கு முதலில் எந்த ஆபரணங்களை சாற்ற வேண்டும்?

இடுப்பில் வெள்ளெருக்கன் கயிற்றால் செய்யப்பட்ட அரைஞான்கயிறு (அண்ணாகயிறு) சாற்ற வேண்டும்
கழுத்தில் இயற்கையான சங்கு மூலம் செய்யப்பட்ட மணிக்கயிறு, கருப்பு மணி கட்ட வேண்டும்
கைகளில் சங்கு வளையல் சூட்ட வேண்டும்
வெள்ளி, செப்பு, இரும்பு கம்பியால் ஆன முக்காப்பு அணிவிக்க வேண்டும்
பெண்குழந்தைக்கு பூவரசு கொட்டையால் அறைமூடி கட்டிட வேண்டும்

தலைப்பிரசவத்திற்கு பின்னர் என்று மாமியார் வீடு திரும்புதல் நன்று?

தலைப்பிரசவத்திற்கு பின்னர் குழந்தைக்கு 5 அல்லது 7ஆம் மாதம் ஆகும் பொழுது மருமகள் குழந்தையுடன் மாமியார் வீடு திரும்புதல் நன்று.

குழந்தைக்கு பால்சோறு ஊட்டுதல்(அன்னபிராச்சனம்)

குழந்தைக்கு சந்திராஷ்டமம் இல்லாத சுபநாளில் அஷ்டம சுத்தியுடன் பால்சோறு ஊட்டலாம்

குழந்தைக்கு பால்சோறு ஊட்டும் நாளில் அனாதை குழந்தைகள் இல்லத்தில் அன்னதானம் செய்யவும்

குழந்தைக்கு மொட்டை அடித்தல், காது குத்துதல் எப்பொழுது செய்யலாம்?

தங்களின் குலவழக்கப்படி குறிப்பிட்ட மாதத்தில் குலதெய்வம் சன்னதியில் தாய்மாமன் மடியில் குழந்தை இருக்க தாய்மாமன் மரியாதை வாங்கித்தந்த காதணியை காதில் குத்துதல் நன்று.

சந்திராஷ்டமம் இல்லாத சுபநாளில் அஷ்டம சுத்தியான நேரத்தில் காதணி அணிவிக்க வேண்டும்

குழந்தைக்கு காதுகுத்தும் காலத்தில் தாயார் கர்பினியாக இருக்கக்கூடாது, அப்படி இருப்பின் அடுத்த குழந்தை பிறந்த பிறகு செய்ய வேண்டும்

பங்காளிகள் இறந்து 6மாதம் வரை குழந்தைக்கு முடிஇறக்கம், காதுகுத்தல் செய்யக்கூடாது.

*வெளிநாட்டில் உள்ளவர்கள் நல்ல நாளில் மொட்டை அடித்து முடியை தாயகம் வரும் பொழுது உடன் கொண்டுவந்து குலதெய்வம் கோவிலுக்கு காணிக்கையாக்கலாம்.*

ஆயுஷ்ஹோமம் என்று செய்யலாம்?

குழந்தைக்கு நட்சத்திரப்படி ஒருவருடம் முடிந்து இரண்டாவது வருடம் துவங்கும் அன்று அதிகாலையில் ஆயுள்ஹோமம் செய்தல் நன்று. இயலாத நிலையில் அடுத்து வரும் ஜென்ம நட்சத்திரத்தில் செய்யலாம். அதுவும் இயலாத நிலையில் ஆங்கில, தமிழ் தேதிகள்படி அல்லது நல்லநாளில் செய்யலாம்.

குழந்தைக்கு ஜாதகம் எழுதுவது எப்பொழுது?

குழந்தை பிறந்து ஒருமாதம் ஆன பிறகு அல்லது தங்களின் குலவழக்கப்படி ஜாதகம் எழுதாலாம்

தகப்பனார் முகச்சவரம் செய்வது எப்பொழுது?

7ஆம் மாதம் முதல் அல்லது குறைந்த பட்சம் மணைவிக்கு சீமந்தம் முடித்தல் பிறகு சவரம் செய்யக்கூடாது(2 ஆம் குழந்தைக்கும் இப்படித்தான் )

குழந்தை பிறந்தபின்னர் தீட்டு கழிக்கும் நாள் வரை அல்லது 11ஆம் நாள் வரை முகச்சவரம் செய்யக்கூடாது.

குழந்தைக்கு புன்னியாவசனம், பெயர்சூட்டடல்(நாமகரணம்), ஆயுள் ஹோமம் செய்து வைக்க நாள்குறிக்கவும், வழிபாட்டை செய்துவைக்கவும் புரோகிதரை முன்னதாக தொடர்பு கொள்ளவும்

**கடந்த நூற்றாண்டுவரை குழந்தைகளின் வளர்ப்பில் அங்கம் வகித்த முக்கிய சித்த மருத்துவ பொருட்கள்**

| | | |
|---|---|---|
| பிரசவ லோக்கியம் | சீரகம் | கஸ்தூரி |
| வசம்பு | ஓமம் | துளசி |
| தேன் | பூண்டு | கற்பூரவல்லி |
| மாசிக்காய் | உலர்ந்த திராட்சை | பூங்கற்பூரம் |
| மிளகு | விளக்கெண்ணை | |



**எனது தாய் எனக்கு 5 வயது வரை பாலூட்டினார்கள்!**

ஆம் நான் முதல் வகுப்பு படிக்கும் பொழுதும் பள்ளி சென்று திரும்பி வந்தவுடன் தாய்பாலை அருந்தியவன் . என் தாயை பெருமையுடன் இங்கு குறிப்பிடுகிறேன் .


**பாலு சரவண சர்மா**

பழைய தாம்பரம் கிராம பரம்பரை புரோகிதர்- ஜோதிடர்- பஞ்சாங்க கணணம்

எண் 9, 4வது தெரு, கல்யாண் நகர், தாம்பரம்(மே), சென்னை 45, பாரத நாடு.

தொலைபேசி: 91 44 2226 1742, 91 98403 69677

மின்னஞ்சல்: prohithar@gmail.com இணையம்: www.prohithar.com


© முழுகாப்புரிமை 29.9.2010

**புரோகிதர் தொடர்பு நேரம் மதியம் 1 மணிக்கு மேல்**